**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 502/2017** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | **திரு. சீனிவாசன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.11.2024**

6 எதிரி ஆஜர். 1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மேலூர் பெருமாள்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் வேன் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். இன்று ஆஜராகியுள்ள 6 வது எதிரியை தெரியாது. 1 முதல் 4 எதிரிகளைத் தெரியும். 5 வது எதிரியை நீதிமன்றத்தில் பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு மதுரை கே.கே.நகரில் ஆக்டிங் டிரைவராக வேலை பார்த்து வந்தேன். நான் ரெகுலராக வேலை பார்த்தது இல்லை. தேவைப்படும் போது போவேன். ஒரு நாள் காரில் ஒரு 3 மாத குழந்தையை ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் இருந்து (மருத்துவமனை பெயர் ஞாபகம் இல்லை) என்னோடு பத்மாவதி மற்றும் 2 ,

3 பெண்கள் வந்தார்கள். பத்மாவதியைத் தவிர மீதி ஆட்களை ஞாபகம் இல்லை. கே.கே.நரில் உள்ள பத்மாவதி வீட்டிற்கு வந்தோம், 10 நாட்கள் பத்மா அக்கா வீட்டில் குழந்தையை வைத்திருந்தார்கள். குழந்தை இருப்பதாக ரவிசங்கர் என்பவருடைய மனைவியிடம் சொன்னேன். பின்னர் நான் ரவிசங்கர் அண்ணன் மற்றும் பெயர் தெரியாத 2, 3 நபர்களோடு முத்துப்பட்டியில் குழந்தைகள் காப்பகத்தில் போய் ஒப்படைத்தோம், நானும் ரவிசங்கர் அண்ணன் மற்றும் 2 நபர்கள் குழந்தையை மீட்பதற்காக கூடல்புதூர் காவல்நிலையத்திற்கு சென்றோம். கூடல்புதூர் காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. நான் சம்பளம் கட்டவில்லை என்று அங்கிருந்து 2 மாதத்தில் வேலையை விட்டு போய் விட்டேன். ஒரு மாதம் கழித்து ரொம்ப சிரமமாக இருந்ததால் ரவிசங்கர் அண்ணனிடம் நான் வேலை கேட்டேன். 500 ரூபாய் தருகிறேன், வேலை இருக்கிறது என்று ரவிசங்கர் அண்ணன் சொன்னார். பத்மா வீட்டில் இருந்து முத்துப்பட்டி காப்பகத்தில் சேர்க்கும் வரை நடுவில் எங்கு இருந்தது என்று எனக்குத் தெரியாது. கூடல்புதூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பின்னர் என்னை போலீசார் கவிதாவின் செல்போன் எண்ணை கொடுத்து பேசச்கொன்னார்கள். ஹரீஷ் ஹோட்டல் அருகில் உள்ள ஓட்டு வீட்டில் குழந்தை இருந்தது. அந்த வீடு யாருடையது என்று எனக்குத் தெரியாது. நான் போலீசார், பெண் காவலர், ரவிசங்கர் அண்ணன், ஒரு ஏட்டையா ஆகியோர் குழந்தையை எடுத்துக்கொண்டு முத்துப்பட்டி குழந்தைகள் காப்பகத்திற்கு வந்தோம். என்ன முறையில் குழந்தையை கைப்பற்றி முத்துப்பட்டி குழந்தைகள் காப்பகத்தில் குழந்தையை நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி

கொடுத்தோம். கேகே நகரில் பத்மா வீட்டில் இருந்த குழந்தை திருமங்கலம் ஹரீஷ் ஹோட்டல் அருகில் உள்ள ஓட்டு வீட்டிற்கு எப்படி போனது என்று எனக்கு சத்தியமாக தெரியாது. நான் வேலையை விட்டு போய் 1 ½ மாதங்களாக கேகே நகருக்கு வரவில்லை. அதனால் பத்மா வீட்டில் இருந்த குழந்தைக்கு என்ன ஆனது என்பது எனக்குத் தெரியாது. பத்மா வீட்டில் இருந்து திருமங்கலத்திற்கு குழந்தை எப்படி போனது என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்) :**

போலீசார் விசாரணையில் 12.06.2016 ம் தேதி 2, 3 எதிரிகள் மற்றும் அவர்களது மகன் அபிஷேக் ஆகியோருடன் முடக்கத்தான் பகுதியில் உள்ள எஸ்.எஸ் என்ற தனியார் ஸ்மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்று கூறியதாகவும், அவர்களுக்கு சொந்தமான TN-59-AS-3474 Alto வண்டியை எடுத்து மூவரையும் அழைத்துச் சென்றேன் என்றும், சுமார் 1.00 மணியளவில் 2, 3 எதிரிகள் மருத்துவமனைக்குள் சென்று விட்டு 20 நிமிடம் கழித்து காருக்குள் வந்து உட்கார்ந்தார்கள் என்றும், சிறிது நேரத்தில் வெள்ளை நிற ஆடை அணிந்த ஒரு நர்ஸ் பிறந்த குழந்தையை துணியில் சுற்றிய நிலையில், பத்மாவிடம் கொடுத்தாகவும், அங்கிருந்து பத்மா அக்கா வீட்டிற்கு சென்றதாகவும், அதன்பின் குழந்தையை பார்ப்பதற்காக அறக்கட்டளையில் இருந்து மயில் மற்றும் கவிதாவை ஏற்றிக்கொண்டு பத்மாவதி வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், பத்மாவதி வீட்டில்

இருந்த ஆண் குழந்தை எப்போது பார்த்தாலும் அழுது கொண்டே இருக்கிறதே எதற்காக வைத்திருக்கிறீர்கள் என்று நான் கேட்டதாகவும், அதற்கு கவிதா அந்த குழந்தையை விற்பதற்காகத்தான் எடுத்து வந்துள்ளோம் என்றும், அந்த குழந்தையை 4, 5 லட்சத்திற்கு விற்றால் அவருக்கு கம்ப்யூட்டர் சென்டர் வைத்து தருவதாக மேடம் சொன்னதாக கவிதா என்னிடம் சொன்னார் என்றும், மேலும் என்னைப் பார்த்து உனக்குத்தான் குழந்தை இல்லையே நீ கூட பணத்தை கொடுத்து வாங்கிக்கோ என்று சொன்னதாகவும், உனக்கு என்றால் 2 லட்சம் குறைத்து பேசி வாங்கித்தருகிறேன் என்று சொன்னதாகவும் என்னிடம் அவ்வளவு பணம் கிடையாது, மேலும் இது யார் பெத்த பிள்ளையோ இது தப்பு என்று சொன்னதாகவும், வேறு யாராவது கேட்டால் சொல்லு, உனக்கும் பங்கு தருகிறோம் என்று சொன்னதாகவும், 18.06.2016 ம் தேதி அந்த குழந்தையை காரில் வைத்து, எங்கோ கொண்டு போனார்கள், எங்கோ மறைத்து வைத்திருக்கிறார்கள் என தெரியாதால் ரவிசங்கரிடம் இது பற்றி சொன்னேன் என்றும், அவர் கவிதா செல் நம்பர் 9047137132 என்ற எண்ணை தெரிவித்தேன் என்றும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் வந்து அந்த குழந்தையை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பின்னர் திருமங்கலம், மறவன் குளம் மெட்டல் கம்பெனி எதிரேயுள்ள காம்பவுண்டுக்கு சென்ற போது பாக்கியலட்சுமி என்பவர் வீட்டில் கவிதா மேற்படி ஆண்குழந்தையுடன் இருந்ததாகவும், நான் மேற்படி கவிதா மற்றும் குழந்தையை அடையாளம் காண்பித்தாகவும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை (5, 6 எதிரிகள் தரப்பில்) :**</u>

நான் ரவிசங்கர் அண்ணன் மற்றும் பெயர் தெரியாத 2, 3 நபர்களோடு முத்துப்பட்டியில் குழந்தைகள் காப்பகத்தில் போய் ஒப்படைத்தோம் என்று கூறியுள்ளதை கூடல்நகர் காவல்நிலையத்தில் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் குழந்தை இருப்பதாக ரவிசங்கர் மனைவியிடம் சொன்னேன் என்பதை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் குழந்தைகள் காப்பகத்தில் குழந்தையை ஒப்படைத்தபோது நான் கையொப்பம் போட்டேனா என்பது ஞாபகம் இல்லை. நானும் ரவிசங்கரும் கூடல்நகர் காவல்நிலையம் சென்ற போது என்னை விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும் போது எனக்கு தெரிந்த தகவல்களை அனைத்தையும் போலீசாரிடம் சொன்னேன். அங்கிருந்து 2 மாதத்தில் வேலையை விட்டு போய் விட்டேன். ஒரு மாதம் கழித்து ரொம்ப சிரமாக இருந்ததால் ரவிசங்கர் அண்ணணிடம் நான் வேலை கேட்டேன் 500 ரூபாய் தருகிறேன் வேலை இருக்கிறது என்று ரவிசங்கர் சொன்னார் என்பதை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 1 ம் எதிரியிடம் ஆக்டிங் டிரைவராக வேலை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவங்கள் எதுவும் எனக்குத் தெரியாது என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பத்மாவதி என்பவருடன் காரில் சென்று தனியார் மருத்துவமனயில் இருந்து குழந்தையை கூட்டி வந்தேன் என்பது பொய் என்று சொன்னால் சரியல்ல.

**( 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,

மகளிர் நீதிமன்றம்,மதுரை